Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

வழக்கு சாட்சி எண். PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்முருகன் | கிராமம் | : | கோட்டப்பட்டி |
| தந்தை பெயர் | : | ஜெயராஜ் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 38 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **7th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 28.12.2025ம் தேதி காலை 11 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது குரும்பட்டி கிராமத்தைச்சேர்ந்த குப்பன் என்பவரின் மகன் வேலாயுதம் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று பரிசீலனை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இருந்தபடியால் அன்றைய தினமே கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண். 185/2025 ச/பி 332(c), 309(4) BNS படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை

நீதிமன்றத்திற்கு அனுப்பி நகலை எனது உயர் அதிகாரிகளுக்கு அன்றைய தினமே அனுப்பினேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக அன்றைய தினம் பொறுப்பில் இருந்த மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களது பார்வைக்கு வைத்தேன். வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

(எதிரி தரப்பில் இருந்து இலவச சட்ட உதவிகள் மூலம் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. K.குமரவேல் என்பவர் ஆஜர் ஆகாத படியாலும் நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படவிருந்த Amicus curiaeயை எதிரி மறுத்துவிட்டதாலும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தேதி ஒத்திவைக்கப்படாமல் முடித்து வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**